Department of Health

Llywodraeth Cymru
Welsh Government

# நிகடீன் உட்சுவாசப் பொருட்களின் விற்பனை வயது

## 2014 ம் ஆண்டின் சிறார்கள் மற்றும் குடும்பங்கள் சார் சட்டத்தின் கீழான உத்தேச விதிகள் பற்றிய கலந்தாராய்வு

நவம்பர் 2014

## பொருளடக்கம்


1. இக்கலந்தாராய்வின் நோக்கம் .......... 4
2. பின்புலம் .......... 6

ஈ-சிகரெட்டுக்கள் .......... 6

உரிமம் உள்ள பொருட்கள் .......... 7

ஈ-சிகரெட் பாவனை .......... 7

புகையிலை புகைத்தலுடனான தொடர்பு .......... 8

நிகடீனால் உண்டாகும் விளைவுகள் .......... 9

3. உத்தேச விதிகளின் விபரங்கள் .......... 10

நிகடீன் உட்சுவாசப் பொருட்களை விளக்குதல் .......... 10

மருந்துப் பொருட்கள் அல்லது மருத்துவ சாதனங்கள் .......... 10

பதிலாள் மூலம் ஈ-சிகரெட் கொள்வனவு .......... 11

குற்றங்கள் மற்றும் தண்டங்கள் .......... 11

விற்பனை வயது .......... 11

பதிலாள் கொள்வனவு .......... 12

செயல்படுத்தல் .......... 12

4. விதிகளின் பரப்பெல்லை .......... 12
5. தாக்கத்தை மதிப்பிடுதல் .......... 13
6. கலந்தாராய்வில் எவ்வாறு ஈடுபடலாம் .......... 14
7. புகையிலைத் தொழில்துறையுடனான நேரடி அல்லது மறைமுகத் தொடர்புகள் பற்றிய பதிலிறுப்பாளர்களின் பிரகடனம் .......... 15
8. அடுத்த நடவடிக்கைகள் .......... 15
9. கலந்தாராய்வுச் செயல்முறை பற்றிய கருத்துக்கள் .......... 15
10. தகவல்களின் இரகசியம் பேணுதல் .......... 16

இணைப்பு A .......... 17

2014 ம் ஆண்டின் சிறார்கள் மற்றும் குடும்பங்கள் சார் சட்டத்தின் கீழ் இயற்றப்படவுள்ள நகல் விதிகள .......... 17

இணைப்பு B .......... 20

உத்தேச விதிகள் பற்றியும் தொழில்துறையில் அவற்றால் ஏற்படக்கூடிய தாக்கம் பற்றிய மதிப்பீடு பற்றியும் கலந்தாராய்வில் எழுப்பப்படும் கேள்விகள் .......... 20

# 1. இக்கலந்தாராய்வின் நோக்கம்

1.1. மின்சிகரெட்டுக்கள் (ஈ-சிகரெட்டுக்கள் என்றும் அறியப்படுபவை) போன்ற நிகடீன் புகையிலைப் பொருளை உட்சுவாசிக்க உதவும் உற்பத்திப் பொருட்களையும், அவற்றின் பாகங்களையும் விற்பனை செய்வதற்கு 18 வயதைக் குறைந்தபட்ச வயதாக்கும் நோக்குடன் கொண்டுவரப்படும் விதிகள் பற்றிய கருத்துக்களை அறிவது இக்கலந்தாராய்வின் நோக்கமாகும்.

1.2. சமீப ஆண்டுகளில் மின்சிகரெட்டுக்கள் தோன்றியுள்ளன. இப்பொருட்கள் பற்றிச் சிறார்கள் கூடுதலாக அறிந்திருப்பதனாலும் அவற்றை அவர்கள் பயன்படுத்துவதாலும் ஏற்பட்டுள்ள கவலைகள் காரணமாக அப்பொருட்களின் விற்பனைக்கு வயதுக் கட்டுப்பாடு ஒன்றை ஏற்படுத்த அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது. 2014 ம் ஆண்டின் சிறார்கள் மற்றும் குடும்பங்கள் சார் சட்டத்தின் (“சட்டம்”) 92 ம் பிரிவு, நிகடீன் உற்பத்திப் பொருட்களின் விற்பனைக்கு குறைந்தபட்ச வயது ஒன்றை அறிமுகப்படுத்தும் விதிகள இயற்றும் அதிகாரங்களை இராஜாங்க அமைச்சருக்கு வழங்குகிறது.

1.3. உத்தேச விதிகளின் நோக்கங்களின்படி, ‘நிகடீனை உட்சுவாசிக்கச் செய்யும் உற்பத்திப்பொருள்’ என்பது வாயில் வைத்துப் பயன்படுத்தும் ஒரு கருவி வழியாக நிகடீனைச் சுவாசிக்க வைக்கும் ஏதாவது ஒரு சாதனம் என்று அர்த்தப்படும். அதில் மின்சிகரெட்டுக்கள் (பயன்படுத்திக் கழித்துவிடுவனவும் நீடித்துப் பயன்படுத்தப்படுவனவும்), அவற்றில் உள்ள நிகடீன் மீள்நிரப்பல் சாதனங்கள் மற்றும் அனேகமாக ‘ஈ-லிகுயிட்ஸ்’ என்று கூறப்படும் மின்திரவ நிகடீன் மீள்நிரப்பல் பொருட்கள் அடங்கும்.

1.4. உத்தேச விதிகள் புகையிலை உற்பத்திப் பொருட்களுக்கானவை அல்ல. ஏனெனில் அவற்றின் விற்பனைக்கான வயதுக் கட்டுப்பாட்டு விதிமுறைகள் ஏற்கனவே நடைமுறையில் உள்ளன. நிகடீன் உட்சுவாச உற்பத்திப் பொருட்களுக்கு மட்டும் விதிகள் பொருந்துவதால், இயற்கையாகவே சிறிதளவு நிகடீன் காணப்படும், சில பழங்கள் மற்றும் மரக்கறிகள் போன்ற பொருட்களுக்கு விதிகள் பொருந்தமாட்டா. ஆயினும் அரசாங்கத்தால், அதன் விதிகள் இயற்றும் அதிகாரங்களைக் கொண்டு எதிர்காலத்தில் நிகடீன் கொண்ட வேறு உற்பத்திப் பொருட்களுக்கு விதிகள் இயற்ற இயலும். காலப்போக்கில் அவை இயற்றப்படலாம்.

1.5. உத்தேச விதிகளின் இலக்குகள் வருமாறு:

- மின்சிகரெட்டுக்கள் போன்ற நிகடீன் உட்சுவாச உற்பத்தப் பொருட்களின் விற்பனையை வயதுவந்தோருக்கானவை என்று, சில மருந்துகளுக்கு ஓரளவுக்கு விதிவிலக்களித்து, மட்டுப்படுத்துதல்
- நிகடீன் பழக்கத்துக்கு அடிமையாகும் ஆபத்திலிருந்தும் வளரும் பருவத்து மூளையில் நிகடினால் ஏற்படும் தாக்கத்திலிருந்தும் சிறார்களைப் பாதுகாத்தல்
- நிகடீன் உட்சுவாசப் பொருட்களின் பாவனை, புகையிலை புகைத்தலுக்கு ஒரு ‘வாயில்’ ஆக மாறும் சாத்தியத்திலிருந்து சிறார்களையும் இளையோரையும் பாதுகாத்தல்

1.6. உத்தேச விதிகள்:

- (ஈ-சிகரெட்டுக்கள் போன்ற) நிகடீன் உட்சுவாசப் பொருட்களையும், தொடர்புடைய பொருட்களையும் 18 வயதுக்குட்பட்ட எவருக்கும் விற்பனை செய்வதை ஒரு குற்றச் செயலாக்கும்
- சட்டத்திலுள்ள ‘பதிலாள் மூலம் கொள்வனவு’ செய்யும் புகையிலைக் குற்றச்செயலை ஈ-சிகரெட்டுக்களுக்கும் பொருந்துமாறு விரிவுபடுத்தும். இதன்படி, வயதுவந்தவர் ஒருவர் 18 வயதுக்குக் குறைந்த ஆளொருவர் சார்பில் நிகடீன் உட்சுவாசப் பொருள் ஒன்றை வாங்குவதும் ஒரு குற்றமாக இருக்கும்.

- மருந்தென உரிமம் பெறப்பட்ட நிகடீன் உட்சுவாசப் பொருள் ஒன்று, ஒரு சிறுபிள்ளைக்கு மருத்துவ சிபார்சு செய்யப்படுமிடத்து, அல்லது அது சிறார்கள் பாவனைக்கானது என்று கூறப்படுமிடத்து, அதன் விற்பனைக்கு விதிவிலக்கு அளிக்கும்

1.7. உத்தேச விதிகள் மேலும் விபரமாக **பிரிவு 3 இல்** விளக்கப்பட்டுள்ளன.

1.8. இக்கலந்தாராய்வினால் முன்மொழியப்படும் விற்பனை வயது பற்றிய விதிகள், இங்கிலாந்தில் மற்றும் வேல்ஸில், வேல்ஸ் அமைச்சர்களின் உரிய இணக்கத்துடன் செயற்படும்.

1.9. நிகடீனை உட்சுவாசிக்கும் பொருட்களுக்கு விற்பனை வயது விதிக்கும் விதிகளைக் கொண்டுவருவது அரசாங்கத்தின் நோக்கமாகும். விதிகளைத் தீர்மானிக்குமுன் ஆர்வலர்களின் பின்னூட்டலைக் கருத்தில் கொள்ளும் நோக்குடன் உத்தேச விதிகளின் விபரங்கள் பற்றிய கருத்துக்களை இக்கருத்தராய்வு அறியவிரும்புகிறது. விதிகளை இயற்றுமுன் நாடாளுமன்றம் அவற்றைப் பரிசீலனை செய்யும்.

1.10. **இணைப்பு A** யில் உள்ள உத்தேச விதிகள் பற்றிய கருத்துக்களையும் **இணைப்பு B** யில் உள்ள குறிப்பிட்ட கலந்தாராய்வு தொடர்பான கேள்விகளுக்கான பதில்களையும் நாங்கள் நாடுகிறோம்.

1.11. இக்கலந்தாராய்வு ஆவணத்துடன் தொழில்துறையில் ஏற்படக்கூடிய தாக்கம் பற்றிய எங்கள் ஆரம்ப மதிப்பீடு மற்றும் சமத்துவம் பற்றிய ஆய்வு என்பன வெளியிடப்பட்டுள்ளன. அவை பற்றிய கருத்துக்களையும் நாங்கள் நாடுகிறோம்.

# 2. பின்புலம்

2.1. சுருக்கமாக, அரசாங்கம் கீழ்க்கண்ட காரணங்களுக்காக விற்பனை வயதுக் கட்டுப்பாட்டைக் கொண்டுவருகிறது :

- பழக்கதோஷ ஆபத்திலிருந்து சிறார்களைப் பாதுகாத்தல் வேண்டும்
- வளரும் பருவத்தில் நிகடீன் பாவனை மூளை வளர்ச்சியை மாற்றலாம்
- மின்சிகரெட்டுக்களின் பாவனையும், அது பற்றிய அறிவும் சிறார்கள் மத்தியில் அதிகரித்து வருகின்றன
- சிறார்கள் மின்சிகரெட்டுக்களால் கவரப்படலாம்
- மின்சிகரெட்டுக்கள் புகையிலைப் பாவனைக்கு இட்டுச்செல்லும் ஒரு 'வாயிலாக' அமைந்துள்ளனவா என்று தீர்மானமாக நாங்கள் அறியோம்
- மின்சிகரெட்டுக்களின் பாவனை சிறார்களின் வளர்ச்சியுறும் சுவாசப்பைகளில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்று நாம் அறியோம்
- அரசாங்கம், விற்பனை வயது குறித்து தற்போது நிலவும் நிச்சயமற்ற தன்மையை நீக்கி, இவ்விடயத்தில் உற்பத்தியாளர்களுக்கும் சில்லறை விற்பனையாளர்களுக்கும் உதவியாக நிலைமையைத் தெளிவாக்கவும் சீராக்கவும் விரும்புகிறது

2.2. பொறுப்பு வாய்ந்த உற்பத்தியாளர்கள், ஏற்கனவே வயதுவந்தோரின் பாவனைக்கு மட்டும் தங்கள் பொருட்களை சிபார்சு செய்துள்ளனர். இதனை அரசாங்கம் அங்கீகரித்துள்ளது. பொறுப்பு வாய்ந்த சில்லறை விற்பனையாளர்களும் ஏற்கனவே தாங்களாகவே முன்வந்து ஈ-சிரெட்டுக்களைச் சிறார்கள் நாடுவதைக் கட்டுப்படுத்தி வருகின்றனர். ஆயினும் சிலர் அவ்வாறு செய்வதில்லை. ஈ-சிகரெட் உற்பத்தியாளர்கள் மற்றும் சில்லறை விற்பனையாளர்களில் பலர் அவற்றின் விற்பனைக்கு ஆகக்குறைந்த வயதை விதிக்குமாறு கோரியுள்ளனர்.

2.3. நிகடீன் உட்சுவாசப் பொருட்களுக்கான விற்பனை வயதுத் தேவைகளைச் செயல்படுத்துவதில் சில்லறை விற்பனையாளர்களுக்கு உதவும்பொருட்டு, உத்தேச விதிகள், தற்போது புகையிலை மற்றும் தொடர்புடைய இதர வயதுக் கட்டுப்பாட்டுப் பொருட்கள் விடயத்தில் ஏற்கனவே நடைமுறையில் உள்ள விற்பனை வயதுத் தேவைகளுக்கு ஒத்திசைவுடையவையாக உருவாக்கப்பட்டுள்ளன.

## ஈ-சிகரெட்டுக்கள்

2.4. சமீப ஆண்டுகளில் ஈ-சிகரெட்டுக்களுக்கான சந்தை துரித வளர்ச்சி கண்டுள்ளது. பல வகைகளிலும் தொழிற்சின்னங்களிலும் ஈ-சிகரெட்டுக்கள் இன்று சந்தைக்கு வந்துள்ளன.

2.5. இங்கிலாந்தின் பொதுமக்கள் சுகாதாரம் (Public Health England (PHE)) எனும் அமைப்பினால் ஈ-சிகரெட்டுக்கள் பற்றிக் கோரப்பட்ட ஓர் அறிக்கையின்படி, அவை சீனாவில், 2003 ம் ஆண்டில் ஆவியான நிலையில் நிகடீன் அளவுகளைச் உட்சுவாசிக்கும் வசதியை ஏற்படுத்துமுகமாகக் கண்டுபிடிக்கப்பட்டது. ஈ-சிகரெட்டுக்கள் முதன்முதலாக ஐரோப்பாவில் 2005 ம் ஆண்டளவில் அறிமுகப்படுத்தப்பட்டன. அன்றிலிருந்து அவற்றின் பிரபல்யம் அதிகரித்து வந்துள்ளது. இப்பொருட்கள் படிப்படியாக மாற்றமடைந்துள்ளன.[1] மின்சிகரெட்டுக்களை புகைத்தல் மற்றும் சுகாதாரம் பற்றிய செயற்பாடு எனும் அமைப்பு (Action on Smoking and Health (ASH)) வர்ணிப்பதாவது:

> *வேப்பரைஸர்ஸ் (திரவத்தை ஆவியாக மாற்றும் சாதனம்) அல்லது எலெக்ட்ரோனிக் நிகடின் டிலிவரி ஸிஸ்டம்ஸ் என்று அறியப்படும் மின்சிகரெட்டுக்கள், எப்போதுமில்லாதபோதும் பெரும்பாலும் சிகரெட்டுகளின் தோற்றத்தையும் உணர்வையும் கொண்டிருக்கும் வகையில் வடிவமைக்கப்படுகின்றன. சிகரெட்டுக்களைவிடத் தீங்கு குறைந்த மாற்றுக்களாகவும், அவை புகையை வெளிப்படுத்தாமையால், புகைத்தல் விலக்கப்படும் இடங்களில் பயன்படுத்தத் தக்கவையாகவும் இவை சந்தைப்படுத்தப்பட்டுள்ளன.*

*மின்சிகரெட்டுக்கள் அல்லது வேப்பரைஸர்களில் மூன்று பிரதான வகைகள் உள்ளன:*

- *கழித்துவிடக்கூடிய பொருட்கள் ( மீள சார்ஜ் செய்ய இயலாதவை)*
- *மீள சார்ஜ் செய்யக்கூடிய, மீள்நிரப்பல் கலங்கள் கொண்ட மின்சிகரெட் பொதி*
- *மீள சார்ஜ் செய்யக்கூடியதும், நிகடீன் திரவம் நிரப்பும் தாங்கி அல்லது கலன் கொண்டதுமான மின்சிகரெட்*

*இவற்றில் முதலிரு வகை மின்சிகரெட்டுக்கள் "சிகலைக்" எனும் பெயருள்ள பொருட்களாகப் பெரும்பாலும் அறியப்படுகின்றன. அவை சிகரெட் தோற்றம் கொண்டிருப்பதும், அதன் பாவனையாளர் அதனை உள்ளிழுக்கும்போது பற்றவைத்த சிகரெட் போன்று அடியில் ஜுவாலை ஏற்படுவதாலும் அவை இவ்வாறு அறியப்படுகின்றன.* [2]

2.6. சந்தையில் கிடைக்கும் பெரும்பாலான ஈ-சிகரெட்டுக்கள் சுவைதரும் வாசனை கொண்டவை. ஈ-சிகரெட்டுக்களில் ஏராளமான சுவை தரும் வாசனைகள் கிடைக்கும். அவற்றில் சில (செறி கோலா, வைட் சொக்கலேட், பபிள் கம், வனிலா ஐஸ் கிரீம், சக்தி தரும் பானவகை மற்றும் கமி பெயர் சுவைகள்) போன்ற சிறார்களைக் கவரக்கூடியவையாக இருக்கலாம்.

## உரிமம் உள்ள பொருட்கள்

2.7. நிகடீன் உட்சுவாசப் பொருட்கள், அவற்றுக்கு மருந்துகள் மற்றும் சுகாதார ஒழுங்குமுறை முகவரகத்தால் மருந்ததென உரிமம் வழங்கப்படின், புகைத்தலை நிறுத்த உதவும் பொருட்களாகச் சந்தைப்படுத்தப்படலாம்.[3] பல ஈ-சிகரெட் கம்பனிகள் தங்கள் பொருட்களுக்கு மருந்தென உரிமம் கோரி விண்ணப்பம் செய்திருப்பதாக அல்லது செய்யப்போவதாக பகிரங்கமாக அறிவித்தபோதிலும், தற்போது இரண்டு பொருட்களுக்கு மட்டும் உரிமம் வழங்கப்பட்டுள்ளது. நிகடீன் உட்சுவாசப் பொருட்களின் விளக்கத்துக்கு அமைவான அவையாவன: *வோக்* மற்றும் *நிகொரெட் இன்ஹலேட்டர்.*

2.8. நிகடீனுக்கு மாற்றான மருந்து என்று அங்கீகரிக்கப்பட்ட நிகடீன் உட்சுவாசப் பொருள் ஒன்று 18 வயதுக்குட்பட்ட சிறார்களுக்குக் கீழ்க்கண்ட நிபந்தனைகளின் பேரிலேயே விற்கப்படலாம்: (அ) செல்லுபடியான மருத்துவர் சிபார்சுச் சிட்டையைச் சமர்ப்பித்தல் (அது என்ன வகை என்கிற பேதமில்லை) அல்லது (ஆ) பொருளில் அது 18 வயதுக்குட்பட்டவர்களுக்கானது என்று மருந்து சந்தைப்படுத்தல் அதிகாரிகளால் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

2.9. உரிமம் பெற்ற மருந்துகள் புறம்பான ஒழுங்குமுறை விதிகளுக்குக் கட்டுப்பட்டவை. விளம்பரம், பொதியிட்டுப் பிரபல்யப்படுத்தல், அவை எவருக்கு வழங்கப்படுபவை என்பன போன்ற விற்பனை மற்றும் விநியோக அம்சங்களை ஒழுங்குமுறை விதிகள் கொண்டிருக்கும்.

## ஈ-சிகரெட் பாவனை

2.10. ஈ-சிகரெட்டுக்கள் பிரபலமடைந்து வருவதுடன் அவை தற்போது பரவலாக விளம்பரப்படுத்தப்பட்டும் வருகின்றன. பெரிய பிரித்தானியாவில் தற்போது 2.1 மில்லியன் மின்சிகரெட் பிடிக்கும் வயதுவந்தோர் இருப்பதாக ASH மதிப்பிட்டுள்ளது - 2012ம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட 700.000 பேரிலிருந்து அதிகரித்த எண்ணிக்கையாக இது காணப்படுகிறது.[4] இங்கிலாந்திலும் வேல்ஸிலும் இப்பொருட்களை 18 வயதுக்குக் கீழ்ப்பட்டோர் நுகர்வது பரந்து காணப்படாதுவிடினும், சர்வதேச ரீதியில் கிடைக்கும் சான்றுகள், இளையோரது ஈ-சிகரெட் பாவனை அதிகரிக்கக்கூடிய வாய்ப்பைச் சுட்டிக்காட்டுகின்றன.

2.11. பிரித்தானிய சிறார்கள் ஈ-சிகரெட்டுக்கள் பற்றி நன்கு அறிந்துவைத்திருப்பதைக் கிடைக்கும் சான்றுகள் எடுத்துக்காட்டுகின்றன. PHE ஆல் ஏற்பாடு செய்யப்பட்ட ஈ-சிகரெட் பற்றிய விளக்கம் மற்றும் சந்தைப்படுத்தல் குறித்த விசாரணை, பெரிய பிரித்தானியாவில் 11 முதல் 18 வரையான வயதினரில் மூன்றில் இரண்டு பங்கினர் (66%) ஈ-சிகரெட்டுக்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பதாகக் கண்டுபிடித்து அறிவித்துள்ளது. 7% ஒரு தடவையாவது ஈ-சிகரெட் பிடித்துள்ளனர். 2% சில அல்லது பல தடவைகளில் பிடித்துள்ளனர். வேறோர் ஆய்வின்போது வேல்ஸில் உள்ள சிறார்களில் மூன்றில் இரண்டு பங்கினர் ஈ-சிகரெட்டுக்களைப் பற்றி அறிந்திருப்பதாகக் கூறினர்.[5] செஷயர் மற்றும் மேர்ஸிஸைட் சிறார்கள் மத்தியில் நடத்தப்பட்ட

ஒரு ஆய்வின்போது அதில் பங்குபற்றிய சிறார்கள் அனைவரும் ஈ-சிகரெட்டுக்கள் பற்றி கேள்விப்பட்டோ அவை என்னவென்று அறிந்தோ உள்ளது தெரியவந்தது. இவ்வாய்வு மேலும் கண்டுபிடித்ததாவது:

> *ஈ-சிகரெட் பிடிக்கும் இளையோரில் பெரும்பாலானோர், அவற்றை உற்பத்தி செய்து சந்தைப்படுத்துவோர் சிலாகித்துப்பேசும் நன்மைகளுக்காக (உ-ம்: சுகாதார நலன்கள், பணத்தை மீதப்படுத்தல், புகையிலை புகைத்தல் விலக்கப்பட்டுள்ள இடங்களில் பாவனையாளர்கள் நிகடீனை நுகர அனுமதித்தல்) அவற்றைப் பிடிப்பதில்லை, ஆனால் தங்கள் சகாக்கள் போல நடக்கும் பொருட்டு, அல்லது அவர்கள் மனதில் பதியவைக்கும் நோக்குடன், அல்லது தங்களைப்பற்றித் தாங்கள் விரும்பும் ஓர் அடையாளத்தை ஏற்படுத்தும் பொருட்டு "ஈ-சிகரெட்டை அதற்காகவே" பிடிக்கிறார்கள் எனும் உணர்வு அனைத்துத் தரப்புக்கள் மத்தியிலும் மேலோங்கிக் காணப்படுகிறது.*[6]

2.12. சிறார்கள் மற்றும் இளையோர் இப்பொருட்களை நன்கு அறிந்துவைத்திருப்பதற்கான முக்கிய காரணம் ஈ-சிகரெட்டுகளுக்காகச் செய்யப்படும் விளம்பரமாக இருக்கலாம். ஈ-சிகரெட்டுக்கள், சூப்பர்மார்க்கெட்ஸ் எனப்படும பெருவிற்பனை நிலையங்கள், செய்திப்பத்திரிகை முகவர்கள் விசேட பொருட்கள் விற்கும் கடைகள், மருந்துக் கடைகள் என்பன உட்படப், பலதரப்பட்ட சில்லறை விற்பனை நிலையங்களில் விற்பனைக்குக் கிடைக்கும். அத்துடன் அவை கடையில் அனேகமாக முக்கியத்துவத்துடன் காட்சிப்படுத்தப்பட்டு விளம்பரப்படுத்தப்படுகின்றன. ஈ-சிகரெட் கம்பனிகள் போட்டாபோட்டி விலைகளில் இறங்கி, டுவிட்டர் போன்ற சமூக ஊடகங்களை உள்ளடக்கி, சந்தைப்படுத்தல், விளம்பரப்படுத்தல் ஆகியவற்றில் முதலீடு செய்கின்றன.[7] ஈ-சிகரெட்டுக்கள் பரந்த அளவில் விளம்பரப்படுத்தப்படுகின்றன. இது சிலர் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

2.13. பொறுப்பு வாய்ந்த ஈ-சிகரெட் உற்பத்தியாளர்கள் சிறார்களைக் குறிவைத்து அவற்றைச் சந்தைப்படுத்தமாட்டார்கள் என்பதை அரசாங்கம் அங்கீகரிக்கிறது. ஆயினும் ஈ-சிகரெட் கம்பனிகள் வயதுவந்தோரைக் கவரும் தூண்டுதல் செயல்பாட்டில் ஈடுபடும் வேளை இத்தூண்டுதல் இளையோர் மத்திலிலும் எதிரொலிக்கும் ஆபத்து காணப்படுகிறது. ஈ-சிகரெட்டுக்கள் கடையில் வைத்துச் சந்தைப்படுத்தப்பட்டு வருவதால் அதனையும் இளையோர் கூடுதலாக எதிர்கொள்ள நேருகிறது. கடைகளில் ஈ-சிகரெட்டுக்களின் சந்தைப்படுத்தல் பெறும் முக்கியத்துவம் அப்பொருட்களின்மீதான கவர்ச்சியை அதிகரிப்பது உண்மையெனத் தோற்றுகிறது.

## புகையிலை புகைத்தலுடனான தொடர்பு

2.14. புகையிலை புகைத்தலுடன் சிறார்களின் ஈ-சிகரெட் பாவனை மிகவும் தொடர்புடையதாக இருக்கும் அதே வேளை சமீபத்தில் வேல்ஸ் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட ஓர் ஆய்வறிக்கை, ஈ-சிகரெட் பாவனை நிகடீனுடனான ஒரு சிறுபராய பரிசோதனையின் ஒரு புதிய வடிவமாக இருக்கலாமென்பதற்கு தற்காலிக சான்றாக இருக்கலாமென்று கூறுகிறது.5 புகைத்தலைவிட ஈ-சிகரெட் பாவனை 10-11 வயதானோர் மத்தியில் கூடுதலாகக் காணப்படலாம். இக்குழுவினரில் 6% சிறார்கள் ஈ-சிகரெட் பிடித்தது உண்டு என்று அறிவித்தனர். ஓப்பீட்டாக 2% சிறார்கள் புகைத்தது உண்டு என்று அறிவித்தனர். செஷயரிலும் மேர்ஸிஸைட்டிலும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றின்போது, இளையோர், ஈ-சிகரெட்டுக்களை, உதாரணமாக, புகையிலை புகைத்தலுக்குப் பதிலான பொருட்கள் எனக்கருதாமல், அவை புறம்பான தனிப் பண்புடைய பொருட்கள் என்றே கருதினர் என்று கண்டுபிடிக்கப்பட்டது. இளையோர் பலர் ஈ-சிகரெட்டுக்களைத் தாங்கள் பிடிப்பது "வெறுமனே அவை அவையாக இருக்கும் காரணத்தின் பொருட்டு" என்றும் "உல்லாசமாகப் பொழுதுபோகுவதற்காக" என்றும் "புதிதாக ஒன்றை முயன்று பார்ப்பதற்காக" என்றும் கூறுவதாக ஆய்வு கூறுகிறது. அத்துடன் ஈ-சிகரெட்டுக்களின் வெவ்வேறு சுவை வாசனை உணர்வுகள் மற்றும் வடிவமைப்புக்கள் மீதும் பாவனையாளர்களால் அச்சாதனங்களை தங்கள் தனித்தன்மைக்கேற்ப மாற்றம் செய்து வைத்துக் கொள்ளும் வாய்ப்பு மீதும் இளையோரின் கவனம் முக்கியமாக ஈர்க்கப்படுவதை ஆய்வு கண்டுள்ளது. வண்ண வடிவமைப்புக்களுடனும் வகையான சுவை வாசனைகளுடனும் உள்ள ஈ-சிகரெட்டுக்கள், புகையிலைச் சிகரெட்டுக்களின் சுவையை அல்லது இரசனையை விரும்பாத இளையோருக்கு நிகடீனுடன் பரிசோதனையில் ஈடுபடும் வாய்ப்பையும் கவர்ச்சியையும் வழங்கக்கூடுமென ஆய்வாளர்கள் தீர்மானித்துள்ளனர்.[8] வழமையான சிகரெட் புகைத்தலைவிட ஈ-சிகரெட்டுக்கள் பாவனைக்கு இலகுவானவையாக இருக்கக்கூடும்.

2.15. இங்கிலாந்தின் பிரதம மருத்துவ அலுவலர் தனது 2013 ஆண்டு அறிக்கையில், '*சிகரெட்டுக்கள் உட்பட, வழமையான புகையிலைப் பொருட்களின் பாவனைக்கான நுழைவாயிலாக ஈ-சிகரெட்டுக்கள் இளையோர் பலருக்கு இருக்கலாம்' என்று கவலை தெரிவித்திருக்கிறார்*.[9] புகையிலைப் பாவனைக்கு ஈ-சிகரெட்டுக்கள் ஒரு நுழைவாயிலாக அமைகிறதா என்று பரிசீலனை செய்யும் நீள்வழி ஆய்வுகள் மேற்கொள்ளப்படாத நிலையில் ஈ-சிகரெட்டுக்களின் பாவனை காரணமாக புகையிலைப் புகைத்தலுக்கு இட்டுச்செல்லும் "நுழைவாயில் தாக்கம்" உண்டா என்று எங்களால் இக்கட்டத்தில் உறுதியாகக் கூற இயலாது. இக்கேள்விக்குத் தீர்க்கமாகப் பதில் ஒன்றைக் கூறுவதற்கு மேலும் ஆய்வு தேவை. உலக சுகாதார தாபனம் சமீபத்தில் வயது வராதோருக்கு ஈ-சிகரெட்டுக்களை விற்பனை செய்யலாகாது யோசனை தெரிவித்திருந்தது.

## நிகடீனால் உண்டாகும் விளைவுகள்

2.16. நிகடீன் பழக்கம் விடமுடியாத ஒன்று என்று நீண்டகாலமாக நிலைநாட்டப்பட்டு வந்துள்ளது. அது விடமுடியாப் பழக்கத்தை ஏற்படுத்தும் வலுமிக்க மருந்துப்பொருளாகும். அது, மனிதர்களில் பழக்கத்துக்கு அடிமையாகும் உள்ளார்ந்த தன்மை தொடர்பில், அவர்களுக்கு அவர்களது நடத்தையிலும் உளரீதியிலும், விளைவுகளை உண்டுபண்ணுவதில் கொகேயின் அல்லது மோர்பைனைவிட ஐந்துமுதல் பத்துமடங்கு வரை வலுகூடியதாகக் காணப்படுகிறது.[10] அரசாங்கம் சிறார்களையும் இளையோரையும் எப்பொருளிலிருந்தும், குறிப்பாகத் தீங்கு விளைவிக்கும் எப்பொருளிலிருந்து, பாதுகாக்க விரும்புகிறது.

2.17. இளையோர் விரைவாகவே நிகடீனுக்கு அடிமையாகலாம். புகையிலை புகைத்தலால் ஏற்படும் நிகடீனைப் பொறுத்தவரை விடமுடியாப் பழக்கத்துக்குரிய அறிகுறிகள் இளையவர் ஒருவரின் முதல் புகைப்பிடிப்பைத் தொடர்ந்து விரைவில் வெளிப்படலாம். இவ்வறிகுறிகளைப் புதிதாகப் புகைப்பவர்கள் விடமுடியாத நிகடீன் பழக்கத்தால் ஏற்படுவதாக அனேகமாக உணர்வதில்லை.[11] வளரும் பருவத்து மூளை, அவ்வாறு வளரும் காலத்தில் தொடர்ச்சியாக வளர்ந்துகொண்டிருக்கும். அத்துடன் அது வயதுவந்தோரின் மூளையைவிடத் தனித்துவமாக வேறுபட்டுள்ளது என்றும் ஆய்வு முடிவுகள் எடுத்துக்காட்டுகின்றன. வேறுபாடுகளில் ஒன்று வளரும் பருவத்தோர் நிகடின் தரும் சுகானுபவத்தைக் கூடுதலாக உணரக்கூடியவர்கள் என்பதாகும். பலர் வளரும் பருவத்தில் புகைத்தலில் ஈடுபடுவதற்கு இதுவே காரணமாக இருக்கலாம்.[12] டுத்ராவும், வேறு பலரும் ஈ-சிகரெட்டுக்களால் வெளிப்படுத்தப்படும் நிகடீன், வளரும் பருவத்து மூளையில் ஏற்படுத்தும் தாக்கம் குறித்து வர்ணித்துள்ளனர்.

> *வழமையான சிகரெட்டுக்களிலும் பார்க்க ஈ-சிகரெட்டுக்கள் குறைவான நச்சுப்பொருட்களை மிகச்சொற்ப மட்டங்களில் வெளியிடும்போதிலும், அவற்றில் விடமுடியாப் பழக்கத்தை, சிகரெட்டுக்களைப் போன்ற மாதிரிகளில் வழங்கும் நிகடீன் உண்டு. நிகடீன், மூளையில் உள்ள கொலினேர்ஜிக் பாத்வேய்ஸ் எனப்படுபவற்றில் நிரந்தர தாக்கத்தை ஏற்படுத்தி, கவனம் செலுத்தல், நினைவாற்றல், ஊக்கம் ஆகியவற்றைத் தாக்கி, மூளையிலும் நடத்தையிலும் குழப்பம் ஏற்படுத்துவதாக விலங்கின மாதிரிகள் காட்டுகின்றன. குறிப்பாக வளரும் மனித மூளை நிகடீன் தாக்குதலுக்கு இலகுவில் உள்ளாகக்கூடியது. ஏனெனில் அது வளர்ந்துகொண்டிருக்கிறது.*[13]

# 3. உத்தேச விதிகளின் விபரங்கள்

3.1. சட்டத்தின் 92 ம் பிரிவின்கீழ் விதிகள் இயற்றப்படும்.[14] உத்தேச விதிகள் **இணைப்பு A** இல் விபரிக்கப்பட்டுள்ளன. அவற்றைச் சட்டத்துடன் தொடர்புபடுத்தி வாசித்தல் வேண்டும்.

## நிகடீன் உட்சுவாசப் பொருட்களை விளக்குதல்

3.2. வயது 18 'நிகடீன் உட்சுவாசப் பொருட்களின்' விற்பனைக்குரிய குறைந்தபட்ச வயதாகப் பொருந்தும். இவ்விளக்கம் (பாவனைக்குப்பின் கழித்துவிடக்கூடிய வகை மற்றும் மீள சார்ஜ் செய்து பயன்படுத்தக்கூடிய வகை உட்பட) ஈ-சிகரெட் சாதனங்கள் அனைத்தையும் (மீள்நிரப்பப்பட்ட நிரப்பிகள் மற்றும் திரவம் போன்றவை உட்பட) அவற்றின் மீள்நிரப்பிகளையும் உள்ளடக்கும். உத்தேச விதிகளின்படி, வாய் வழி உபகரணம் ஒன்றினூடாக நிகடீனை உட்சுவாசிக்க உதவவென உள்ள எவ்வொரு சாதனமும் ஒரு 'நிகடீன் உட்சுவாச சாதன'மாகக் கொள்ளப்படும். சாதனம் வழமையான சிகரெட் போன்று தோற்றினாலும் சரி, வேறு ஒரு வடிவத்திலிருந்தாலும் சரி, தரப்பட்ட விளக்கத்துக்கு இசைவானதாக இருப்பின் அது போதுமானது. நிகடீன் உட்சுவாசப் பொருட்கள் அனைத்தும், எவ்வாறு அவை இயங்கவைக்கப்படினும் சரி, விதிகளுக்குக் கட்டுப்பட்டவையாக இருக்கும். 'இரட்டைப் பாவனை' மீள்நிரப்பல் சாதனங்கள், அவை நிகடீன் அல்லது நிகடீன் அற்ற திரவத்தால் மாறி மாறி நிரப்பப்படினும், விற்பனை வயது விதிகளுக்கு அவை கட்டுப்படும்.

3.3. சில ஈ-சிகரெட்டுக்கள் வழமையான புகையிலை சிகரெட்டுக்கள் போன்று தோற்றமாட்டா. அத்துடன் அவை புரோபிலீன் க்ளைகோல் திரவம் நிரப்பும் கலன் அல்லது தாங்கி ஒன்றைக் கொண்டிருக்கும். இத்திரவங்கள் புறம்பாக விற்கப்படலாம். அத்துடன் அவற்றில் நிகடீன் இருக்கலாம் அல்லது இல்லாதிருக்கலாம். சில சாதனங்கள், அவற்றின் விற்பனை முனைகளில் நிகடீன் அற்றவையாக காணப்படலம். ஆயினும் அவற்றை ஒரு வாய்வழி உபகரணம் மூலம் நிகடீன் உட்சுவாசத்துக்குப் பயன்படுத்தும் நோக்கம் இருப்பின், உத்தேச விதிகள் அவற்றுக்கும் பொருந்துபவையாக இருக்கும்.

3.4. மின்கலங்கள், சார்ஜ் செய்யும் சாதனங்கள் மற்றும் மின்சாரத் தொடுப்புக்கள் போன்ற நிகடீன் உட்சுவாசப் பொருட்களுக்கான உப பாகங்களை உத்தேச விதிகளின்கீழ் கொண்டுவரும் நோக்கம் அரசாங்கத்துக்கு இல்லை.

## மருந்துப் பொருட்கள் அல்லது மருத்துவ சாதனங்கள்

3.5. மருந்துகள் மற்றும் சுகாதாரப் பொருட்களின் ஒழுங்குமுறைக்கான முகவரகத்திடமிருந்து (Medicines and Healthcare Products Regulatory Agency (MHRA)) மருந்து என உரிமம் பெற்ற எந்த நிகடீன் உட்சுவாசப் பொருளுக்கும் விதிகள் விதிவிலக்கு அளிக்கும். மருந்துகள் என்று உரிமம் அளிக்கப்பட்ட நிகடீன் உட்சுவாசப் பொருட்கள் 18 வயதுக்குட்பட்ட சிறார்களுக்கும் இளையோருக்கும் மருத்துவர் சிபார்சுச் சிட்டை பெற்றுக்கொண்டதன்பேரில் வழங்கப்படலாம். 18 வயதுக்குட்பட்ட ஆட்களின் பாவனைக்கு என்று குறிப்பிடப்படும் நிகடீன் உட்சுவாசப் பொருள் எதுவெனினும் அதற்கும் நகல் விதிகள் விதிவிலக்கு வழங்க உத்தேசிக்கின்றன.

3.6. செல்லுபடியாகும் மருத்துவ சிபார்சுச் சிட்டை ஒன்றின் பேரில் மருந்தாளர் ஒருவர் விற்கும் மருந்துகள் அல்லது மருத்துவ சாதனங்களான நிகடீன் உட்சுவாசப் பொருட்களுக்கு (அல்லது மருத்துவர் சிபார்சுச் சிட்டையின் பேரில் மட்டும் மருந்துகளை விற்பனை செய்யப்படக்கூடிய இதர அபூர்வ சந்தர்ப்பங்களில்) அவற்றின் விற்பனைக்கு விதி 4 விதிவிலக்கு அளிக்கும். 18 வயதுக்குட்பட்டவர்களுக்கானவை எனக் குறிப்பிடப்பட்டு உரிமம் பெற்ற, அதிகாரபூர்வ, மருத்துவர் சிபார்சுச் சிட்டை தேவையற்ற மருந்துகளுக்கு விற்பனை வயதுத் தேவைகளிலிருந்து விதி 5 விதிவிலக்கு அளிக்கும். இச்சந்தர்ப்பங்களில் விற்பனையாளர் ஒரு மருந்தாளராக இருப்பது அவசியமல்ல. ஏனெனில், பொது விற்பனைப் பட்டியலில் உள்ள மருந்துகள், சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு, எவ்லகைக் கடைகளிலும் விற்பனை செய்யப்படலாம்.

3.7. புகைத்தலிலிருந்து விடுபட முயலும் 18 வயதுக்குட்பட்ட சிறார்களுக்கு, மருத்துவர் சிபார்சுச் சிட்டை தேவைப்படும் மருந்துகளாக உரிமம் பெற்ற நிகடீன் உட்சுவாசப் பொருட்கள் தொடர்ந்து கிடைக்கும். இதனால் அவர்கள் மருத்துவ கண்காணிப்பின்கீழ் அவர்கள் பொருளைப் பயன்படுத்துவார்கள். தற்போதைய நிலைமைப்படி, 18 வயதுக்குட்பட்ட ஆளொருவர் *நிகொரெட் இன்ஹலேட்டர்* போன்ற நிகடீன் உட்சுவாசப் பொருட்களை, அவற்றில் 18 வயதுக்குட்பட்ட சிறார்களுக்கானவை என்று சந்தைப்படுத்தல் அனுமதி குறிப்பிடப்பட்டிருப்பின், ஒரு செய்திப்பத்திரிகை முகவரிடம் அல்லது சூப்பர்மார்க்கெட்டில் வாங்க இயலும்.

3.8. நிகடீன் வில்லைகள் மற்றும் தோலில் ஒட்டும் துண்டுகள் (nicotine gums and patches) போன்ற நிகடீனை வாய் வழியாக உட்சுவாசிக்க உதவும் உபகரணம் அல்லாத உட்சுவாச மாற்றுப் பயிற்சி மருந்துகள் இவ்விதிகளின் பரப்பெல்லைகளுள் அடங்கமாட்டா.

## பதிலாள் மூலம் ஈ-சிகரெட் கொள்வனவு

3.9. புகையிலையைப் பதிலாள் மூலம் கொள்வனவு செய்யும் தற்போதைய குற்றச் செயலை (சட்டத்தின் 91ம் பிரிவு) விதிகள் நிகடீன் உட்சுவாசப் பொருட்களையும் உள்ளடக்கும் வகையில் விரிவாக்கும்.

3.10. இது, 18 வயதுக்குட்பட்ட சிறுபிள்ளை ஒருவரின் சார்பில் வயதுவந்தவர் ஒருவர் நிகடீன் உட்சுவாசப் பொருள் ஒன்றை, அப்பிள்ளையிடம் மருத்துவர் சிபார்சுச் சிட்டை இருந்தாலொழிய, வாங்குவதை அல்லது வாங்க முயற்சிப்பதை ஒரு குற்றமாக்கும். இதனால் ஈ-சிகரெட்டுக்கள் போன்ற நிகடீன் உட்சுவாச பொருட்களின் கொள்வனவு, பதிலாள் மூலம் புரியப்படும் புகையிலை மற்றும் மதுபானக் கொள்வனவுக் குற்றத்துக்குச் சமனான குற்றமாகக் கொண்டுவரப்படும். அத்துடன் இதனால் சில்லறை விற்பனையாளர்களுக்கு ஒரேசீரான, தெளிவானதொரு நிலைமை ஏற்படும்.

3.11. பதிலாள் கொள்வனவுக் குற்றம் மருந்துகளாக உரிமம் பெற்ற சில நிகடீன் உட்சுவாசப் பொருட்களுக்கும் பொருந்தலாம். உதாரணமாக, மருத்துவர் சிபார்சுச் சிட்டை தேவையற்றதாக பொருள் ஒன்று உரிமம் பெற்றிருந்து, அப்பொருள் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கானது என்று குறிப்பிடப்பட்டிருந்தால், அதனை ஆளொருவர் 18 வயதுக்குட்பட்ட சிறுபிள்ளை ஒருவர் சார்பில் வாங்குவது அல்லது வாங்க முயற்சிப்பது குற்றமாகும். (அதாவது பொது விற்பனைப் பட்டியல் மருந்தாக)

3.12. புகையிலை விடயத்திலான குற்றம் போலவே, சிறுபிள்ளை சார்பில் கொள்வனவு செய்யும் வயதுவந்தவரே குற்றம் புரிகிறார், சில்லறை விற்பனையாளர் அல்ல.

## குற்றங்கள் மற்றும் தண்டங்கள்

3.13. விற்பனை வயது அல்லது பதிலாள் மூலம் கொள்வனவு தொடர்பான விதிகளின்கீழ் குற்றம் ஒன்று புரியப்படிருக்குமிடத்து, அதற்கான தண்டங்களைச் சட்டம் விவரிக்கிறது. சட்டத்துக்கு அமைய நடக்காத ஆளொருவர் குற்றவியல் குற்றம் ஒன்றைப் புரிபவராவார்.

### விற்பனை வயது

3.14. உத்தேச விதிகளின்கீழ் நிகடீன் உட்சுவாசப் பொருள் ஒன்றை 18 வயதுக்குட்பட்ட ஆளொருவருக்கு ஒருவர் விற்பனை செய்யுமிடத்து, குற்றம் ஒன்று புரியப்படுகிறது.

3.15. சட்டத்தின் 91(5) ம் பிரிவின்கீழ் குற்றம் ஒன்றின் பேரில் குற்றவாளியாகக் காணப்படும் ஆளொருவர், சுருக்கமுறை விசாரணைக் குற்றத்தீர்ப்பு வழங்கப்பட்டதன்பேரில், நியம தரத்தின் 4 ம் மட்டத்துக்கு மேற்படாத தண்டம் ஒன்றுக்கான பொறுப்புநிலையில் இருப்பார்.[15] இது 18 வயதுக்குட்பட்ட ஆட்களுக்குப் புகையிலை விற்பனை செய்வதற்கு தற்போது செயல்முறையில் உள்ள தண்டத்துக்கு அமைவானதாகும்.

3.16. சட்டத்தின் 93 ம் பிரிவு நிகடீன் உட்சுவாசப் பொருட்களின் விற்பனையை சிறார்களுக்குத் தொடராக புகையிலை விற்பது தொடர்பாகக் கடைப்பிடிக்கப்படும் நடவடிக்கை ஏற்பாட்டுடன் ஒருங்கிணைக்கிறது. 18 வயதுக்குட்பட்ட ஆட்களுக்கு மீண்டும் மீண்டும் நிகடீன் உட்சுவாசப்

பொருட்களை விற்பனை செய்யக் காணப்படும் ஆளொருவருக்கு அல்லது வணிக நிலையம் ஒன்றுக்கு விற்பனையைக் கட்டுப்படுத்தும் உத்தரவு அல்லது வளாகக் கட்டுப்பாட்டு உத்தரவு பிறப்பிக்கப்படலாம். இத்தகைய உத்தரவு பெயர் குறிக்கப்பட்ட ஆள், அல்லது சில்லறை விற்பனை நிலையம் ஓராண்டு காலம் வரை நிகடீன் உட்சுவாசப் பொருட்களை அல்லது புகையிலையை எவருக்கும் விற்பனை செய்வதற்குத் தடை விதிக்கிறது.

3.17. சட்டத்தின் 92(4) ம் பிரிவு எதிர்வாதத்துக்கு இடமளிக்கிறது. இதன்படி, சில்லறை விற்பனையாளர் ஒருவர் குற்றத்தைப் புரியாது தவிர்க்கும் பொருட்டு நியாயமான நடவடிக்கைகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டன என்று நிரூபிக்கக்கூடியதாக இருக்கும்.

### பதிலாள் கொள்வனவு

3.18. 18 வயதுக்குட்பட்ட ஆளொருவர் சார்பில், விதிகளால் விளக்கப்பட்டவாறான நிகடீன் உட்சுவாசப் பொருள் ஒன்றைக் கொள்வனவு செய்யும் அல்லது கொள்வனவு செய்ய எத்தனிக்கும் வயதுவந்த ஆளொருவர் குற்றம் ஒன்றைப் புரிபவராவார். நிகடின் உட்சுவாசப் பொருட்கள் விடயத்தில் பதிலாள் கொள்வனவுக் குற்றம் புரியும் ஆளொருவக்கு சட்டத்தை செயல்படுத்தும் அலுவலர்கள் நிலையான தண்ட முன்னறிவித்தல் ஒன்றை வழங்கலாம் என்று அரசாங்கம் முன்மொழிறது. நிலையான தண்டத் தொகை £90 என்று (15 நாட்களுக்குள் செலுத்தப்படின் £60). இது மதுபானத்தை பதிலாள் கொள்வனவு செய்யும் குற்றத்தை ஒத்தது. நிலையான தண்ட முன்னறிவித்தல் பெறும் ஆளொருவர் விடயத்தை நீதிமன்றத்தில் தீர்த்துக்கொள்ளும் தெரிவை மேற்கொள்ளலாம். நிலையான தண்ட முன்னறிவித்தலுக்கு இணங்கித் தண்டம் செலுத்த மறுக்கும் அல்லது வேறு வகையில் செலுத்தாதுவிடும் ஆளொருவர் பற்றி நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்படலாம்.

## செயல்படுத்தல்

3.19. உள்ளூராட்சி வணிக தரக்கட்டுப்பாட்டு அலுவலர்கள் உத்தேச விதிகளின் செயல்படுத்தலுக்குப் பொறுப்பாக இருப்பர். தேவையானவிடத்து, அவர்களுக்கு காவல்துறையினர் உதவியாக இருக்கலாம்.

3.20. வலுவானதும் சீரானதுமான செயல்படுத்தலுக்கு ஏதுவாக, 6 ம் விதி, நிகடீன் உட்சுவாசப் பொருட்களுக்கான விற்பனை வயது தொடர்பான குற்றத்தை முதல்நிலை அதிகாரத் திட்டத்தின் (Primary Authority Scheme) பரப்பெல்லைக்குள் கொண்டுவரும். முதல்நிலை அதிகார ஏற்பாடுகள் பற்றிய லேதிக தகவல்களை இணையத்தில், கீழ்க்கண்ட தளத்தில் அறிந்துகொள்ளலாம்:
https://www.gov.uk/government/publications/primary-authority-overview

3.21. மேலும், விற்பனை வயது மற்றும் பதிலாள் கொள்வனவு தொடர்பான குற்றங்கள், 2000ம் ஆண்டின் புலன்விசாரணை அதிகாரங்களின் ஒழுங்குமுறைச் சட்டத்தில் (Regulation of Investigatory Powers Act (RIPA) 2000) உள்ள குற்றங்களின் பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்படும். இது உள்ளூராட்சி செயல்படுத்தும் அலுவலர்கள், விதிகளை வலுவான முறையில் செயல்படுத்துவதற்கு தற்போதுள்ள பாதுகாப்புகளுக்கு அமைய, "நெறிப்படுத்தப்பட்ட கண்காணிப்பில்" ஈடுபட உதவும். நெறிப்படுத்தப்பட்ட கண்காணிப்பு, இரகசியமான, தனிப்பட்டமுறையில் தகவல் பெறக்கூடியதான கண்காணிப்பு எனப் பொருள்படும்.

# 4. விதிகளின் பரப்பெல்லை

4.1. விதிகள் இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் ஆகியவற்றுக்கு மட்டும் பொருந்தும்.

# 5. தாக்கத்தை மதிப்பிடுதல்

5.1. கலந்தாராய்வுக்-கட்டத்தின் தாக்கம் தொடர்பான மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டு இக்கலந்தாராய்வு ஆவணத்துடன் வெளியிடப்பட்டுள்ளது. மதிப்பீட்டுடன் குறிப்பான தொடர்புடைய, கலந்தாராய்வுக் கேள்விகள் பல **இணைப்பு B** இல் உள்ளன. தாக்க மதிப்பீடு பற்றிய கருத்துக்களையும் மதிப்பீட்டை மேலும் விபரிக்க எங்களுக்கு உதவக்கூடியதான சான்றுகள் அல்லது தகவல்களை மேலும் நாடுகிறோம்.

5.2. இக்கலந்தாராய்வு ஆவணத்துடன் சமத்துவத்தின் மீதான தாக்கம் பற்றி ஒரு ஆரம்ப மதிப்பீட்டையும் வெளியிட்டுள்ளோம். 2010 ம் ஆண்டின் சமத்துவச் சட்டத்தின்கீழ் எங்களது பொதுத் துறைக் கடமைகளை நிறைவேற்ற எவ்வாறு இந்த முன்மொழிவுகள் உதவும் என்பது தொடர்பான மேலதிக தகவல்களை வரவேற்கிறோம்.[16]

# 6. கலந்தாராய்வில் எவ்வாறு ஈடுபடலாம்

6.1. கலந்தாராய்வு தொடர்பான கேள்விகள் **இணைப்பு B** இல் விவரிக்கப்பட்டுள்ளன. கலந்தாராய்வு 6 வாரங்களுக்கு - **17 டிசம்பர் 2014** தொடக்கம் **28 ஜனவரி 2015** 23:45 மணி வரை நீடிக்கும். ஆர்வலர், அமைப்பு அல்லது தொழில்துறையினர் எவரிடமிருந்தும் பதில்களை வரவேற்கிறோம்.

6.2. பதிலிறுப்போர் தங்கள் கருத்துக்களை இணையத்தில் தெரிவிப்பதை வரவேற்கிறோம். ஆயினும் கீழ்க்கண்ட வழிகளில் எவற்றின் மூலமும் பதில்களைத் தரலாம்:

- கீழ்க்கண்ட தளத்தில் இணையப் படிவத்தை நிரப்புதல்: http://consultations.dh.gov.uk/tobacco/age-of-sale-for-nicotine-products
- கீழ்க்கண்ட தளத்திலிருந்து பதிலளிக்கும் படிவத்தைப் பதிவிறக்கம் செய்து நிரப்புதல்: www.gov.uk/government/consultations
- உங்கள் பதில்களை கீழ்க்கண்ட முகவரிக்கு மின்னஞ்சல் செய்தல்: nicotineproductsageofsale@dh.gsi.gov.uk
- கீழ்க்கண்ட முகவரிக்கு உங்கள் பதில்களை அஞ்சலிடுதல்:

**Age of Sale Consultation**
**Department of Health**
**6th Floor, Wellington House**
**133-155 Waterloo Road**
**London**
**SE1 8UG**

6.3. இக்கலந்தாராய்வின் நோக்கம், நிகடீன் உட்சுவாசப் பொருட்களின் விற்பனைக்கு வயதுக் கட்டுப்பாட்டுத் தேவைகளை அறிமுகப்படுத்துவதற்கான நகல் விதிகள் பற்றியும், செயல்முறையில் இவ்விதிகள் எவ்வாறு இயங்கும் என்பது பற்றியும் ஆர்வமுள்ள ஆட்களதும், அமைப்புக்களதும், தொழில்துறையினரதும் கருத்துக்களை நாடி அறிந்துகொள்வதே. உங்கள் பதில்களுடன் ஆய்வு மற்றும் சான்றுகளுக்கான மூலக்குறிப்புக்களை வழங்குமாறு கோருகிறோம்.

6.4. இவ்வாராய்வு ஆவணத்தின் பிரதி ஒன்றை மாற்று வடிவம் ஒன்றில் பெற்றுக்கொள்ள நீங்கள் விரும்பினால், அல்லது அந்தரங்கம் காக்கும் காரணங்களுக்காக மாற்று வடிவம் ஒன்றில் பதிலளிக்க விரும்பினால், தயவு செய்து பந்தி 6.2 இல் உள்ள மின்னஞ்சல் அல்லது அஞ்சல் முகவரியில் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

6.5. சுகாதாரப் பிரிவினால் தனித்தனியாகக் கலந்தாராய்வுப் பதில்களுக்குப் பதிலளிக்க இயலாது.

# 7. புகையிலைத் தொழில்துறையுடனான நேரடி அல்லது மறைமுகத் தொடர்புகள் பற்றிய பதிலிறுப்பாளர்களின் பிரகடனம்

7.1. உலக சுகாதார தாபனத்தின் புகையிலைக் கட்டுப்பாடு தொடர்பான வரைச்சட்ட உடன்படிக்கையில் ஒரு தரப்பு என்கிற வகையில், புகையிலைத் தொழிலின் தன்னல அக்கறைச் சக்திகளிமிருந்து பொதுமக்கள் சுகாதாரக் கொள்கையின் மேம்பாட்டைப் பாதுகாப்பது ஐக்கிய இராஜ்யத்தின் கடமையாகும். இக்கடமையை நிறைவேற்றுமுகமாக, **பதிலிறுப்பாளர்கள் அனைவரையும் அவர்கள் புகையிலைத் தொழில்துறையுன் நேரடியாகவோ மறைமுகமாகவோ தொடர்பு பேணுகிறார்களா அல்லது அவர்களிடம் நிதி பெறுகிறார்களா என்று பிரகடனப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.** புகையிலைத் தொழில்துறையினரிடமிருந்தும், அவர்கடன் தொடர்புள்ளவர்களிடமிருந்தும் கிடைக்கும் கலந்தாராய்வுப் பதில்கள் அனைத்தையும் நாங்கள் கவனமாகப் பரிசீலனை செய்து, கலந்தாராய்வுப் பதில்களின் சுருக்க வெளியீட்டில் சேர்த்துக்கொள்வோம்.

# 8. அடுத்த நடவடிக்கைகள்

8.1. இறுதித் திகதியான **28 ஜனவரி 2015** அன்று 23:45 மணிக்குள் கிடைக்கும் பதில்கள் அனைத்தும் கவனமாகப் பரிசீலனை செய்யப்படும். சுகாதாரப் பிரிவின் இணையத் தளத்தில் கலந்தாராய்வுப் பதில்களின் அறிக்கைச் சுருக்கம் ஒன்று கலந்தாராய்வின் முடிவின் பின் உரிய காலத்தில் வெளியிடப்படும்.

8.2. விதிகளின் உள்ளடக்கம் பற்றி இறுதித் தீர்மானம் ஒன்று எடுக்கப்படும். நாடாளுமன்ற அங்கீகாரத்துக்குட்பட்டு, 2015 ம் ஆண்டில் விதிகளை செயல்படுத்தும் நோக்குடன் நாங்கள் திட்டமிட்டு வருகிறோம்.

# 9. கலந்தாராய்வுச் செயல்முறை பற்றிய கருத்துக்கள்

9.1. கலந்தாராய்வுச் செயல்முறை பற்றிக் குறிப்பாகக் கவலைகள் அல்லது கருத்துக்கள் தெரிவிக்க நீங்கள் விரும்பினால், தயவு செய்து கீழ்க்கண்டவருடன் தொடர்பு கொள்ளவும்.

**Consultations Coordinator**
**Department of Health**
**2E26, Quarry House**
**Leeds**
**LS2 7UE**

மின்னஞ்சல்: consultations.co-ordinator@dh.gsi.gov.uk

9.2. தயவு செய்து இம்முகவரிக்கு கலந்தாராய்வுப் பதில்களை அனுப்பாதீர்.

# 10. தகவல்களின் இரகசியம் பேணுதல்

10.1. நாங்கள் சுகாதாரப் பிரிவின் தகவல் சாசனத்தின்படி இக்கலந்தாராய்வுக்கு நீங்கள் அனுப்பும் பதில்களைக் கையாள்வோம்.[17]

10.2. தகவல் சுதந்திரச் சட்டத்தின்கீழ், அரச அதிகாரிகள் பின்பற்றி நடக்கவேண்டிய சட்டவலுவுள்ள நெறிமுறைத் தொகுப்பு ஒன்று உண்டு என்பதையும், அது, வேறு பல விடயங்களுடன் இரகசியம் பேணும் விடயத்தையும் கையாள்கிறது என்பதையும் நீங்கள் அறிந்திருத்தல் வேண்டும். நீங்கள் வழங்கும் தகவல்கள் இரகசியமாக வைத்திருக்கப்படவேண்டுமென்று நீங்கள் விரும்பினால், நீங்கள் ஏன் அவை இரகசியமாக வைத்திருக்கப்படவேண்டுமென்று கருதுகிறீர்கள் விளக்கினால் உதவியாக இருக்கும். தகவல்களை வெளிப்படுத்தக் கேட்டு நாங்கள் அணுகப்பட்டால், உங்கள் விளக்கத்தை நாங்கள் முழுமையாகக் கருத்தில் கொள்வோம். ஆயினும் சூழ்நிலைகள் அனைத்திலும் இரகசியம பேணப்படும் என்று உறுதிப்படுத்த எங்களால் இயலாது. உங்கள் தகவல் தொழில்நுட்பச் சாதனம் உண்டாக்கும் இரகசியம் பற்றிய கோராமை(disclaimer) பிரிவைக் கட்டுப்படுத்தமாட்டாது.

10.3. உங்கள் தனிப்பட்ட தரவுகளை தரவுகள் பாதுகாப்புச் சட்டத்தின்படி பிரிவு கையாளும். பெரும்பாலான சூழ்நிலைகளில் உங்கள் தனிப்பட்ட தரவுகள் மூன்றாவது தரப்புக்களுக்கு வெளியிடப்படமாட்டாது.

# இணைப்பு A

## 2014 ம் ஆண்டின் சிறார்கள் மற்றும் குடும்பங்கள் சார் சட்டத்தின் கீழ் இயற்றப்படவுள்ள நகல் விதிகள

*Draft Regulations laid before Parliament under section 135(6) of the Children and Families Act 2014, for approval by resolution of each House of Parliament.*

---

D R A F T   S T A T U T O R Y   I N S T R U M E N T S

---

**20xx No.xxx**

**PUBLIC HEALTH, ENGLAND AND WALES**

The Nicotine Inhaling Products (Age of Sale and Proxy Purchasing) Regulations 20xx

| | |
|---|---|
| *Made - - - -* | *** |
| *Coming into force* | |
| *Regulations 1 and 2* | **…** |
| *Regulations 3 to 6* | … |

The Secretary of State makes the following regulations in exercise of the powers conferred by sections 92(1), (6) and (7) and 93(8) of the Children and Families Act 2015([1]).

In accordance with section 135(6) of that Act, a draft of this instrument has been laid before Parliament and approved by resolution of each House of Parliament.

In accordance with section 92(8) of that Act, the Secretary of State makes this instrument with the consent of the Welsh Ministers.

**Citation, commencement and interpretation**

**1.**—(1) These Regulations may be cited as the Nicotine Inhaling Products (Age of Sale and Proxy Purchasing) Regulations 20xx.

(2) Regulations 1 and 2 come into force on ….

(3) Regulations 3 to 6 come into force on …..

(4) In these Regulations—

"marketing authorisation" has the meaning given by regulation 8(1) of the Human Medicines Regulations 2012([2]);

---

([1]) 2014 c.6. See section 92(12) for the meaning of "specified".

([2]) S.I. 2012/1916. Relevant amendments were made by S.I. 2013/235, 1855, 2593, 2014/490, 1878.

"medical device" has the meaning given by regulation 2(1) of the Medical Devices Regulations 2002([3]);

"medicinal product" has the meaning given by regulation 2(1) of the Human Medicines Regulations 2012;

"nicotine cartridge" means a cartridge which—

(a) contains a substance which is not tobacco but consists of, or contains, nicotine; and

(b) is intended to form part of a nicotine inhaling device;

"nicotine inhaling device" means a device which—

(a) is intended to enable nicotine to be inhaled through a mouth piece (regardless of whether the device is also intended to enable any other substance to be inhaled through a mouth piece); but

(b) is not tobacco([4]), cigarette papers or a device intended for the consumption of lit tobacco;

"nicotine inhaling product" means a nicotine inhaling device, nicotine cartridge or nicotine refill substance;

"nicotine refill substance" means a substance which—

(a) is not tobacco but consists of or contains nicotine; and

(b) is intended to be used to refill a nicotine inhaling device;

"parallel import licence" has the meaning given by regulation 48(2) of the Human Medicines Regulations 2012;

"prescription only medicine" has the meaning given by regulation 8(1) of the Human Medicines Regulations 2012.

**Proxy purchase of nicotine products**

**2.**—(1) Section 91 of the Children and Families Act 2014 (purchase of tobacco etc. on behalf of persons under 18) is amended in accordance with paragraphs (2) to (4).

(2) In the heading, before "etc." insert "nicotine products".

(3) In subsection (1), for "or cigarette papers" substitute "cigarette papers or a relevant nicotine product".

(4) After subsection (7) add—

> "(8) In this section "relevant nicotine product" means a nicotine product within the meaning of section 92 the sale of which at the same time and in the same circumstances to the individual aged under 18 would be prohibited by regulations for the time being in force under subsection (1) of that section."

**Prohibition of sale of nicotine inhaling products to persons aged under 18**

**3.** — The sale of nicotine inhaling products to persons aged under 18 is prohibited, except where regulation 4 or 5 applies.

**Exception for sales of medicines and medical devices in accordance with a prescription etc.**

**4.**—(1) This regulation applies to the sale of a nicotine inhaling product where—

(a) the nicotine inhaling product is a medicinal product or a medical device; and

(b) the circumstances of the sale are such that it would be permitted under Part 12 of the Human Medicines Regulations 2012 (dealings with medicinal products) if the nicotine inhaling product were a prescription only medicine.

(2) For the purposes of sub-paragraph (1)(b), Part 12 of the Human Medicines Regulations 2012 is to be read as if regulation 244 (exemption in cases involving another's default) were omitted.

([3]) S.I. 2002/618. Relevant amendments were made by S.I 2008/2936.

([4]) See the definition of "tobacco" at section 92(12) of the Children and Families Act 2014.

**Exception for medicines indicated for the treatment of persons aged under 18**

**5.**—(1) — This regulation applies to the sale of a nicotine inhaling product which—

(a) is an authorised medicinal product; and

(b) is indicated for the treatment of persons of the age of the person to whom the product is sold.

(2) For the purposes of this regulation—

(a) a product is indicated for the treatment of persons of a particular age if that indication is described in the summary of the product characteristics for the product in accordance with paragraph 27 of Schedule 8 to the Human Medicines Regulations 2012 (summary of the product characteristics) or Article 11 of Directive 2001/83/EC([5]);

(b) "the summary of the product characteristics" is to be construed in accordance with Article 11 of Directive 2001/83/EC;

(c) a medicinal product is "authorised" if one of the following is in force for the product—

(i) a marketing authorisation; or

(ii) a parallel import licence.

**Amendment of Schedule 3 to the Regulatory Enforcement and Sanctions Act 2008**

**6.** — In Schedule 3([6]) to the Regulatory Enforcement and Sanctions Act 2008([7]) (enactments specified for the purposes of Part 1), at the appropriate place insert—

"Children and Families Act 2014 (c.6), section 92".

Signed by authority of the Secretary of State

([5]) Directive 2001/83/EC of the European Parliament and of the Council of 6 November 2001 on the Community code relating to medicinal products for human use. OJ No L 311, 28.11.2001

([6]) Schedule 3 was amended by Part 4 of Schedule 22 to the Marine and Costal Access Act 2009 (c.23), paragraphs 97 and 99 of Schedule 26 and Part 1 of Schedule 27 to the Equality Act 2010 (c. 15) (as amended by SI 2010/2279, Schedule 1, paragraph 6 and Schedule 2), paragraph 130 of Schedule 7 to the Charities Act 2011 (c. 25), paragraph 4(1) and (2) of Schedule 6 and Part 1 of Schedule 8 to S.I. 2010/2960, section 19(2) of the Scrap Metal Dealers Act 2013 (c.10), paragraphs 12 and 13 of Part 1 of the Schedule to S.I. 2013/1575, regulation 2 of S.I. 2013/2215 and paragraph 10 of Schedule 4 to the Mobile Homes (Wales) Act 2013 (anaw 6).

([7]) 2008 c.13.

# இணைப்பு B

## உத்தேச விதிகள் பற்றியும் தொழில்துறையில் அவற்றால் ஏற்படக்கூடிய தாக்கம் பற்றிய மதிப்பீடு பற்றியும் கலந்தாராய்வில் எழுப்பப்படும் கேள்விகள்

1. நிகடீன் உட்சுவாசப் பொருட்கள் பற்றி விதிகளில் முன்மொழியப்பட்டுள்ள விளக்கம் குறித்துக் கருத்துக்கள் எவையும் தெரிவிக்க விரும்புகிறீர்களா?

2. மருந்துகள் அல்லது மருத்துவ சாதனங்களாக உள்ள நிகடீன் உட்சுவாசப் பொருட்கள் பற்றிய முன்மொழிவுகள் குறித்துக் கருத்துக்கள் எவையும் தெரிவிக்க விரும்புகிறீர்களா?

3. விதிகளைச் செயல்படுத்துவது சம்பந்தமாக அவற்றில் முன்மொழியப்பட்டுள்ள செயல்முறை ஏற்பாடுகள் பற்றிக் கருத்துக்கள் எவையும், அல்லது அவற்றைச் செயல்படுத்த ஏற்படும் செலவுகள் பற்றி அபிப்பிராயங்கள் அல்லது சான்றுகள் எவையும் தெரிவிக்க விரும்புகிறீர்களா?

4. புகையிலை விடயத்தில் உள்ள பதிலாள் கொள்வனவுக் குற்றச்செயலை நிகடீன் உட்சுவாசப் பொருட்கள் விடயத்திலும் செல்லுபடியாக்கும் முன்மொழிவு பற்றிக் கருத்துகள் எவையும் தெரிவிக்க விரும்புகிறீர்களா?

5. வயது 18 க்குக் கீழ்ப்பட்டோரின் ஈ-சிகரெட் பாவனை அவர்களுக்குப் புகைத்தலுக்கு ஒரு வாயிலாக அல்லது புகைத்தலிலிருந்து விடுபடுவதற்கு ஒரு வாயிலாக அமையுமா என்பது பற்றி மேலதிக சான்றுகள் உங்களிடம் உள்ளனவா? உதாரணமாக, ஈ-சிகரெட் விற்பனைக்கு விதிக்கப்படும் குறைந்தபட்ச வயது, 18 வயதுக்குக் கீழ்ப்பட்ட தற்போதைய பாவனையாளர்கள் மீது எவ்வித தாக்கத்தை ஏற்படுத்தும்?

6. நிகடீன் உட்சுவாசப் பொருட்களின் விற்பனைமீது கொண்டுவரப்படும் கட்டுப்பாடு சுகாதார ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்க உதவும் அத்துடன் / அல்லது 2010 ம் ஆண்டின் சமத்துவச் சட்டத்தின்கீழ் எங்கள் கடமைகளைச் செய்ய உதவும் என்பதற்கு மேலதிக சான்றுகள் எவையும் உங்களிடம் உள்ளனவா?

7. தாக்கம் பற்றிய மதிப்பீட்டின் கலந்தாராய்வுக்-கட்டத்துக்கு உதவக்கூடிய தகவல்கள் அல்லது சான்றுகள் உங்களிடம் உள்ளனவா? இலாபத்தில் ஏற்படக்கூடிய நட்டம் பற்றிய எங்கள் மதிப்பீடு உட்பட, சில்லறை விற்பனையாளர்கள், உற்பத்தியாளர்கள், விநியோகஸ்தர்கள் என்போர் மீது ஏற்படக்கூடிய தாக்கம் குறித்து நாங்கள் மேற்கொண்டுள்ள அனுமானங்கள் அல்லது மதிப்பீடுகளைச் சீரமைக்கக்கூடிய சான்றுகள் அல்லது தகவல்களை நாங்கள் குறிப்பாக வரவேற்கிறோம்.

8. சிறிய மற்றும் மிகச்சிறிய வியாபாரங்கள் மீது இவ்வுத்தேச விதிகள் ஏற்படுத்தவல்ல தாக்கங்கள் பற்றி நாங்கள் மேற்கொண்டுள்ள அனுமானங்களில் எதனையும் திருத்தும் வகையிலான தகவல்கள் அல்லது சான்றுகள் உங்களிடம் உள்ளனவா?

9. நகல் விதிகளை மேம்படுத்தும் என்று நீங்கள் கருதும் வேறு எதனையும் நிங்கள் எங்களிடம் கூறவிரும்புகிறீர்களா?

1 Britton, J. and Bogdanovica, I. (2014). மின்சிகரெட்டுக்கள்*: Public Health England ஆதரவில் நடந்த* ஆய்வறிக்கை கிடைக்குமிடம்: www.gov.uk/government/uploads/system/uploads/attachment_data/file/311887/Ecigarettes_report.pdf

2 புகைத்தல் மற்றும் சுகாதாரம் தொடர்பில் நடவடிக்கை (2014). *ASH அறிவுறுத்தல்: ஈ-சிகரெட்டுக்கள்.* கிடைக்குமிடம்: www.ash.org.uk/files/documents/ASH_715.pdf

3 The Stationery Office (2012). மனித மருந்து விதிகள் 2012 (SI 2012/1916)

4 புகைத்தல் மற்றும் சுகாதாரம் தொடரபில் நடவடிக்கை (2014). ASH அறிவுறுத்தல்: பெரிய பிரித்தானியாவில் மின்சிகரெட்டுக்கள் பாவனை. கிடைக்குமிடம்: www.ash.org.uk/files/documents/ASH_891.pdf

5 வேல்ஸ் அரசாங்கம் (2014) கார்களில் மீள்புகைத்தலை எதிர்கொள்ளல் மற்றும் வேல்ஸில் *10-11 வயது சிறார்கள் மத்தியில் ஈ-சிகரெட் பாவனை:CHETS வேல்ஸ் 2 முக்கிய கண்டுபிடிப்புக்கள் பற்றிய அறிக்கை.*

6 Hardcastle, K. and Bennett, A. (2014). *"நான் அறிந்த பலர் ஒன்று வைத்திருக்கின்றனர்": மின்சிகரெட்டுக்கள் பற்றிய இளையோரின் கருத்துக்கள் மற்றும் அனுபவங்கள்.* Centre for Public Health at Liverpool John Moores University, Liverpool.

7 Juang, J. et al. (2014). "டுவிட்டரில் மின்சிகரெட்டுக்களன் சநதைப்படுத்தல் பற்றிய ஒரு குறுக்குவெட்டு நோக்கு" *Tobacco Control* 2014; 23, pp.iii26-iii30.

8 Hardcastle, K. and Bennett, A. (2014). *"நான் அறிந்த பலர் ஒன்று வைத்திருக்கின்றனர்": மின்சிகரெட்டுக்கள் பற்றிய இளையோரின் கருத்துக்கள் மற்றும் அனுபவங்கள்.* Centre for Public Health at Liverpool John Moores University, Liverpool.

9 Davies, S. (2013). பிரதம மருத்துவ அலுவலரின் ஆண்டறிக்கை *2012 – எங்கள் பிள்ளைகள் இதைவிடச் சிறந்தவற்றுக்கு உரித்துடையவர்கள்: தடுத்தல் பயன்தரும்.* இலண்டன் சுகாதாரப் பிரிவு. கிடைக்குமிடம்: www.gov.uk/government/uploads/system/uploads/attachment_data/file/255237/2901304_CMO_complete_low_res_accessible.pdf

10 Royal College of Physicans. (2007). நிகடீன் பழக்கத்தின் தீங்கை குறைத்தல்*: விடமுடியாதவர்களுக்கு உதவுதல்* RCP, London.

11 Gervais, A., et al. (2006). "வளரும் பருவத்தினர் மத்தியில் சிகரெட் பாவனை இயல்பாகத் தொடங்கிய வரலாற்றின் மைல்கற்கள்" Canadian Medical Association Journal. 175(3), pp.255-261.

12 Counotte, D. et al. (2011). "வளரும் பருவத்தில் ஊக்கமுறை வளர்ச்சியும் நிகடீன் இடையூறின் தாக்கமும்" *Developmental Cognitive Neuroscience;* 2011; 1 (2011), pp.430-443.

13 Dutra, L. and Glantz, S. (2014). " யூ எஸ் வளரும் பருவத்தினர் மத்தியில் மின்சிகரெட் மற்றும் சாதாரண சிகரெட்டின் பாவனை ஒரு குறுக்குவெட்டு ஆய்வு" *JAMA Pediatrics* 2014; 168(7), pp.610-617.

14 கிடைக்குமிடம்: www.legislation.gov.uk/ukpga/2014/6/section/92

15 மட்டம் 4 இல் தண்டத்தின் பெறுமதி தற்போது £2,500 வரை உயர்ந்துள்ளது.

16 சமத்துவககடப்பாடு உள்ள அமைப்புக்கள் தங்கள் சேவைகளை வழங்கும்போதும் பணிகளை ஆற்றும்போதும் கீழ்க்கணடவற்றை உரிய கவனத்தில் கொள்ளவேண்டும.

- சட்டவிரோத பாகுபாடு, துன்புறுத்தல், பழிவாங்குதல், மற்றும் சட்டத்தால் விலக்கப்பட்ட வேறு நடத்தையை ஒழித்தல்;
- பாதுகாப்புக்கு உட்பட்ட குணாதியங்களைக் கொண்ட மக்களுக்கும் அவ்வாறில்லாத மக்களுக்குமிடையில் சமத்துவத்தை ஊக்குதல்; அத்துடன்
- பாதுகாப்புக்குட்பட்ட குறிபிட்ட குணாதியத்தைக் கொண்ட மக்களுக்கும் அவ்வாறில்லாத மக்களுக்குமிடையில் நல்லுறவை வளர்த்தல்.

பொதுத்துறையின் சமத்துவ கடமைக்குள் வயது, வலதுகுறைவு, பால் மாற்றம், கர்ப்பம் மற்றும் தாய்மை, இனம் (இனம், தேசிய இனம், நிறம், தேசியம் என்பன அடங்கும்) மதம் அல்லது நம்பிக்கை (நம்பிக்கையின்மையும் அடங்கும்),பால், பாலியல் விருப்பு என்பன அடங்கும். விவாகம், சிவில் பங்காளிகள் அந்தஸ்து என்பனவும் இதனுள் அடங்கும். ஆயினும் இது பாகுபாட்டை ஒழிக்கம் தேவை சம்பந்தப்பட்டவரை மட்டுமே பொருந்தும்.

17 கிடைக்குமிடம்: www.gov.uk/government/organisations/department-of-health/about/personal-information-charter